[5th February 1959

Ceylon repatriates

* 14 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have sent any proposal to the Centre during 1958 regarding the rehabilitation of Ceylon repatriates?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Yes, Sir.

* 15 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of persons repatriated to this State from Ceylon in 1958 so far; and

(*b*) the number rehabilitated so far?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) During the period 1st January to 7th December 1958, 8,842 persons have been repatriated from Ceylon to this State.

(*b*) There is no information.

Sri A. V. P. ASAITHAMBI: தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வெளியேற்றப்படுகிற தமிழர்களுக்கு அகதிகளுக்குத் தரப்படுகிற சலுகை போலவே எல்லாச் சலுகைகளும் தரப்படவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தினிடத்தில் வற்புறுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டபோது சனம் அமைச்சர் அவர்கள் அகதிகள் பிரச்சனை வேறு, இந்தத் தமிழர்களுடைய பிரச்சனை வேறு என்று சொன்னார்கள். ஆனால் நாடு அற்றவர்கள் என்று வெளியேற்றப்படுகிறவர்கள் எல்லோரும் தமிழர்கள். இங்கே அகதிகளாகவே வருகிறார்கள். ஆகவே அகதிகள் பிரச்சனையைப் போலக் கருதி அகதிகளுக்கு அளிக்கும் எல்லாச் சலுகைகளையும் இவர்களுக்கு அளிக்கவேண்டும் என மத்திய அரசாங்கத்தினிடம் வற்புறுத்துவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அகதிகள் வேறு, இவர்கள் பிரச்சனை வேறு என்று மீண்டும் சொல்லுகிறேன். நாடு அற்றவர்கள் பிரச்சனை வேறு. இங்கே வந்து கொண்டிருக்கிறவர்களுடைய பிரச்சனை வேறு. இதைப்பற்றி தனியாக பரிசிலனை செய்யப்பட்டது. அதற்கென்றே ஏற்படுத்தப்பட்டவர்கள் சில சிபார்சுகள் செய்திருக்கிறார்கள். அந்த சிபார்சுகளைத் தனித்தனியாக அரசாங்கம் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். குறிப்பாக ஒரு சிபார்சு அவர்களுக்கென்றே தொழில் அமைப்பது. முக்கியமாக நூற்பு ஆலை அமைப்பது. அதற்காக மத்திய அரசாங்கம் உதவி அளிக்கிறது.

Sri V. ARUNACHALA THEVAR: இலங்கை தேயிலைத் தோட்டங்களில் இதற்கு முன்னால் 25 சத விகிதம் சிங்களவர்களையே நியமிக்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தார்கள். இப்போது 50 சத வீதம் சிங்களவர்களை நியமிக்க வேண்டும் என்று ஏற்படுத்தியிருப்பதனால் அதிகமான இந்திய-இலங்கை தமிழர்களுக்கு வேலை கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இப்படிச் செய்வது இலங்கையிலிருந்து தமிழர்களை வெளியேற்றுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் சூழ்ச்சி என்பதையும் தமிழர்களுக்குச் செய்யக்கூடிய அநீதி என்பதையும் உணர்ந்து இதை வற்புறுத்திக் கண்டிக்க வேண்டும் என நமது அரசாங்கத்தார் மத்திய அரசாங்கத்தினிடம் சிபார்சு செய்வார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: இது வேறு பிரச்சனை. அந்த நாட்டில் உள்ளவர்களுக்கு வேலை கொடுக்கிறோம் என்று சொன்னால் அதை நாம் ஆட்சேபிப்பதும் முறை என்று தோன்றவில்லை. இருந்தாலும் இந்த மாதிரியான விஷயங்களை மத்திய அரசாங்கமும் கவனித்து வருகிறது.

5th February 1959]

Sri K. SATTANATHA KARAYALAR: குறிப்பிட்ட தொழிலில் நீண்ட நாட்களாக ஈடுபட்டிருந்ததற்குத் தகுந்த அத்தாட்சி அதிகாரப் பூர்வமாக காட்டுகிற இலங்கையிலிருந்து வருகிற அகதிகளுக்கு இங்கும் அதே தொழில் கொடுக்க சர்க்கார் வசதி செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: கூடிய வரையில் அவ்வாறு வசதி செய்து கொடுக்கலாம். ஆனால் எல்லோரும் அங்கே என்ன தொழில் செய்து கொண்டிருந்தார்களோ அதே தொழிலை இங்கு கொடுப்பது என்பது முடியாத காரியம். அது சாத்தியம் என்றும் தோன்றவில்லை.

Sri A. VEDARATHNAM: இலங்கை நாட்டில் நடந்த கலவரத்தின் போது தமிழர்களுடைய சொத்துக்கள் எல்லாம் அதிகமாகக் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. கொள்ளையடிக்கப்பட்ட அந்த சொத்துக்களை மீட்டுத்தர என்ன முயற்சி எடுப்பதென்று மத்திய அரசாங்கம் கவனிக்க வேண்டிய விஷயமாக இருந்தபோதிலும், கொள்ளையடிக்கப்பட்டவர்கள் தமிழர்களாதலால் அந்தப் பிரச்னையை நமது மாநில சர்க்காருடைய பிரச்னையாகக் கருதி மத்திய அரசாங்கத்திற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள் ? கொள்ளை போன சொத்துக்களை அவர்களுக்கு மீட்டுத்தர இவர்கள் முன் வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: மாநில சர்க்கார் எந்த அளவுக்கு அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு அக்கறை எடுத்துக்கொண்டு வருகிறது. நஷ்ட ஈடு கொடுக்கிற விஷயத்தில் மத்திய சர்க்கார் கவனம் செலுத்தி வருகிறது. அதுவும் அவர்களுக்கு அப்பாற்பட்ட விஷயம். அந்த நாட்டில் நடந்தது. சர்வதேச சட்டம் இருக்கிறது. எத்தகைய பரிகாரம் சாத்தியமோ அது தேடப்படும்.

Sri K. ANBAZHAGAN: இலங்கை நாட்டில் உள்ள தமிழர்கள் இயல்பாக அங்கேயே வாழ்வதற்கு உரிமையைப் பெறாதிருந்தும், அப்படி உரிமை பெறாமல் நமது நாட்டுக்கு வரநேருமானால் அவர்களை இங்கே ஏற்று பராமரிக்க வேண்டிய முழுப் பொறுப்பையும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நமது சர்க்கார் வற்புறுத்துமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அவ்வாறு ஏற்படுகிற பிரச்னையை அவ்வப்போது தீர்க்க இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

Sri K. VINAYAKAM: Sir, what are the proposals which this Government have placed before the Central Government for the rehabilitation of those who have been rendered homeless or Stateless and driven back to our country?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: I think I have given this information previously to this House. But I do not have that information just now.

Sri S. B ADITYAN: இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி வருகின்ற தமிழ் நாட்டவர்களை அகதிகள் என்று கருதமுடியாது என்றும் எந்தவிதமான உதவியும் செய்யமுடியாது என்று மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்திற்கு தெரிவித்தது உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அப்படி எந்தவிதமான உதவியும் செய்ய முடியாது என்று மத்திய அரசாங்கம் தெரிவிக்கவில்லை. இலங்கையிலிருந்து வருபவர்களுக்கு ஒரு நார்ப்பு ஆலை ஏற்படுத்த மத்திய அரசாங்கம் உதவி அளிக்க முன்வந்திருக்கிறது.